# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 27.08. 2021 | 1)தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் செயல்பட்டு வரும் பாத்திமா நகர் ஆரம்ப நகர்ப்புற சுகாதார நிலையம் போதுமான வசதிகள் இல்லாமல் தற்போது தற்காலிகமாக பழைய மாநகராட்சி அலுவலக கட்டிட வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி நகர்ப்புற சுகாதார நிலையத்திற்கு புதியதாக கட்டிடம் கட்டுவதற்கு சத்திரம் தெரு பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டு மேற்படி இடத்தில் புதியதாக நகர்ப்புற சுகாதார நிலையம் அமைப்பதற்கு கீழ்க்கண்ட விபரப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. | 78)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
| 1 | Construction of Primary Health Centre Building at Chatram Street (Fathima Nagar PHC) | 110.00 |
| | மேற்படி நகர்ப்புற சுகாதார நிலையம் கட்டுவதற்கு தலைவர் / திட்ட இயக்குநர் மாநில சுகாதார செயலாளர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 1869/NUHM/SHS/2015 நாள் 15.02.2021 ஆணையின் படி ரூ. 80.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்டமாக ரூ. 16.00 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்கண்ட திட்ட நிதியின் கீழ் சத்திரம் தெரு பகுதியில் புதியதாக நகர்ப்புற சுகாதார நிலையம் அமைக்கவும், திட்ட நிதி போக கூடுதலாக வரும் தொகை ரூ. 30.00 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வழங்க கோரி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/02990/2021 | |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் செயல்பட்டு வரும் லூர்தம்மாள்புரம் ஆரம்ப நகர்ப்புற சுகாதார நிலையம் போதுமான வசதிகள் இல்லாமல் தற்போது தற்காலிகமாக லூர்தம்மாள்புரம் பழைய சமுதாய கூட கட்டிட வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி நகர்ப்புற சுகாதார நிலையத்திற்கு புதியதாக கட்டிடம் கட்டுவதற்கு கீழ்க்கண்ட விபரப்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. | 79) அலுவலகக் குறிப்பு அனமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of Primary Health Centre Building at Loorthammalpuram | 110.00 |
| | மேற்படி நகர்ப்புற சுகாதார நிலையம் கட்டுவதற்கு தலைவர் / திட்ட இயக்குநர் மாநில சுகாதார செயலாளர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் 1869/NUHM/SHS/2015 நாள் 15.02.2021 ஆணையின்படி ரூ. 80.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்டமாக ரூ. 16.00 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.<br>எனவே மேற்கண்ட திட்ட நிதியின் கீழ் லூர்தம்மாள்புரம் பகுதியில் புதியதாக நகர்ப்புற சுகாதார நிலையம் அமைக்கவும், திட்ட நிதி போக கூடுதலாக வரும் தொகை ரூ. 30.00 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வழங்க கோரி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன் மொழிவு அனுப்பவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/2991/2021 | |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சியில் வார்டு எண். 15 பாண்டுரங்கன் தெருவில் மாநகராட்சி மேலூர் நடுநிலைப்பள்ளி இயங்கி வருகிறது. தற்போது 688 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். ஆனால் 8 வகுப்பறைகள் மட்டுமே உள்ளது. எனவே கூடுதல் வகுப்பறைகள் கட்ட வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் அப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட போதுமான இடவசதி இல்லை. எனவே அதே வார்டில் மாநகராட்சிக்கு சொந்தமான சர்வே வார்டு எண். 4 பிளாக் எண்.3 சர்வே எண். 1050/3ல் கூடுதல் வகுப்பறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பகுதியில் மாநகராட்சி பள்ளி மாணவர்கள் கல்வி பயில ஏதுவாக, ஆறு வகுப்பறைகள் தலைமையாசிரியர் அறை, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான கழிப்பறை வசதிகள், மின்சாரம் மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளுடன் கூடிய பள்ளிக்கட்டிடம் அமைக்கும் பணி அவசியமானதாகிறது. எனவே மாநகராட்சி பள்ளி மாணவர்கள் கல்வி பயில நல்லதொரு சூழலை வழங்கும் பொருட்டு, மேற்படி பணியினை ரூ. 205.00 இலட்சம் மதப்பீட்டில், மாநகராட்சி கல்வி நிதி 2021–22ம் ஆண்டு பணியாக மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | 80) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
| 1 | தூத்துக்குடி மாநகராட்சி – சத்திரம் தெருவில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடம் அமைக்கும் பணி | 205.00 |
| | **மொத்தம்** | 205.00 |
| | மாநகராட்சி பள்ளி குழந்தைகளின் கல்வி தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும், கற்றல் மற்றும் கற்பித்தல் செயலின் அவசியம் கருதியும் | |

| | | |
|---|---|---|
| | இப்பணியினை ரூ 205.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். இ2/03869/2021 | |
| | 4)தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக 05.08.2008 முதல் தரம் உயர்த்தப்பட்டு அதனைத் தொடர்ந்து கடந்த 2011ஆம் ஆண்டு எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட சமயம் 5 கிராம ஊராட்சிகள் மாநகராட்சி எல்லையுடன் ஒருங்கிணைக்கப்பட்டு 60 வார்டுகளைக்கொண்டு விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தூத்துக்குடி நகரமானது தொழில்துறை மற்றும் போக்குவரத்து ஆகியவற்றில் அதிவேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாக இருந்து வருகிறது.<br>மாநகராட்சி நிலைக்கு தரம் உயர்த்தப்பட்ட பின்னர் பல்வேறு வளர்ச்சி பணிகள், திட்ட பணிகள் மற்றும் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு இப்பணிகள் யாவும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் இருந்து வருகிறது.<br>இந்நிலையில் ஆணையர் அவர்களின் கீழ் பணிபுரியும் சார்நிலை அலுவலர்களான முதுநிலை நகரமைப்பு அலுவலர் நகர்நல அலுவலர் ஆகியவர்களுக்கு என மாநகராட்சிக்கு சொந்தமான வாகனங்கள் ஏதும் இல்லை. இதனால் இந்நிலையிலான அலுவலர்களுக்கு தனியார் வாகனங்கள் மாத வாடகைக்கு ஈடுபடுத்தப்பட்டு மாநகராட்சிப் பொது நிதியில் இருந்து இதற்கான செலவினங்கள் ஏற்படும் நிலை உள்ளது. இந்நிலையில் பல்வேறு வளர்ச்சி பணிகளை பார்வையிடவும் ஆய்வு பணிகளுக்கு வருகை தரும் உயர் அலுவலர்களை அழைத்து செல்வதற்கு என பிரத்யேகமாக தனியாக வாகனம் எதும் இம்மாநகராட்சியில் இல்லாத காரணத்தால் இப்பணிகளுக்கும் ஆணையர் அவர்களின் வாகனத்தையே பயன்படுத்தும் நிலை உள்ளது. இதனால் நிர்வாக ரீதியான சிரமங்களை எதிர் கொள்ள வேண்டி உள்ளது. இது போன்ற பணிகளுக்கு அவசர தேவைக்கு ஏற்ப வாடகை அடிப்படையில் குறிப்பிட்ட நாட்களுக்கு வாகனங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. இது போன்ற அசாதாரண சூழ்நிலைகளை முற்றிலும் தவிர்க்க ஏதுவாக இம்மாநகராட்சிக்கு இன்னோவா ( Innova Car ) வாகனம் ஒன்று ஆணையர் அவர்களின் அலுவலகப் பணிகளை மேற்கொள்ள பிரத்யேகமாக தேவைப்படுகிறது.<br>இந்நிலையில் இம்மாநகராட்சிக்கு சொந்தமான அம்பாசிடர் வாகனம் டிஎன்.69 எச்4446–யினை கழிவு செய்ய சென்னை மோட்டார் வாகன பராமரிப்பு துறை இயக்குநர் அவர்களின் ஆணை நாள் 12.07.2017ல் பெறப்பட்டு, தொடர் நடவடிக்கையில் கடந்த 10.06.2020 அன்று பொது ஏலம் விடப்பட்டு உரிய தொகை மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. | 81) அலுவலகக் குறிப்பு 1 , 2 மற்றும் 3 அனுமதி வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | எனவே மேற்படி கழிவு செய்யப்பட்ட அம்பாசிடர் வாகனத்திற்கு பதிலாக மேற்சொல்லப்பட்ட அத்தியாவசிய காரணங்களின் அடிப்படையில் புதிய Innova Crysta BSVI VX-MT 7 Seater வாகனம் ஒன்றினை TOYOTA தயாரிப்பு நிறுவனத்தார் மூலம் மாநகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து நேரடியாக வாங்கி பயன்படுத்திடவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 27.12 லட்சத்திற்கும் மற்றும் இதர அத்தியாவசிய கூடுதல் செலவினங்களுக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுத்திடவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1)மாநகர் நிர்வாக நலன் கருதி அனுமதி வழங்கலாம்<br>2)மேற்படி புதிய வாகனம் வாங்கிட உரிய பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்றிடவும் அனுமதி வழங்கலாம்.<br>3)இச்செலவினத்தை 2021–22ம் வருட திருத்திய வரவு செலவு திட்டத்தில் வழிவகை செய்திடவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2118/2019/இ5 | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 27–08.2021

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி